மாலை முரசு

பக்கங்கள் 23

## சிறைக் கைதி ஒருவர் அடித்துப் படுகொலை

### களுத்துறையில் பயங்கரம்

களுத்துறை சிறைச்சாலையில் கைதி ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

அந்தக் கைதி கடும்

04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மார்கழி 10 செவ்வாய்க்கிழமை 26.12.2023 அதிர்வு 148



### ஆழிப்பேரலையின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல்

# ஆறாத்துயரில் உறவுகள் ஒப்பாரி வைத்துக் கதறல்

(ஏ.ஜே.சார்ள்ஸ்)

ஆழிப்பேரலை பேரனர்த்தம் ஏற்பட்டு 19 ஆண்டுகள் கடந்தும் ஆறாத்துயரில் உறவுகள் இன்று ஒப்பாரி வைத்து அழுத காட்சி அனைவரையும் மெய்சிலிர்க்க வைத்தது.

கடந்த 2004ஆம் ஆண்டு ‘சுனாமி’ எனும் ஆழிப்பேரலை ஏற்பட்டதன் காரணமாக பல்லாயிரக்கணக்கான உயிர்கள் காவு கொள்ளப்பட்டன.

அதன் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழர் தாயகமான வடக்கு - கிழக்கு உள்ளிட்ட நாடெங்கும் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

உயிரிழந்தவர்களை நினைவேந்தி நாட்டின் அனைத்து இடங்களிலும் இன்று காலை 9.25 மணி முதல் 9.27 மணி வரை இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி

04▶

# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு; உயிரிழப்பும் திடீரென உயர்வு

இலங்கையில் கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை சுமார் 12 ஆயிரத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த வருடம் 72 ஆயிரத்து 903 டெங்கு நோயாளர்கள் பதிவாகியிருந்த நிலையில், இந்த வருடத்தில் இதுவரையில் 85 ஆயிரத்து 636 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் தரவுகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை, இந்த ஆண்டில் இதுவரை 50 பேர் டெங்கு நோயால் உயிரிழந்துள்ளனர். கடந்த ஒரு வாரத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையும், அதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கையும் திடீரென அதிகரித்துள்ளது.

04▶






### மன்னார் - யாழ். பிரதான வீதியில் விபத்து

# பஸ் மோதி 8 மாடுகள் இறந்தன; பல மாடுகளுக்குப் படுகாயம்!

### அதி வேகமாகப் பயணிகளுடன் பயணித்த பஸ்ஸால் விபரீதம்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் – யாழ்ப்பாணம் பிரதான வீதி நாயாத்துவழி பகுதியில் திங்கள் நேற்று (25) மாலை இடம்பெற்ற விபத்தில் 8 மாடுகள் உயிரிழந்துள்ளன. பல மாடுகள் படுகாயமடைந்துள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து மன்னார் நோக்கிப் பயணிகளுடன் அதி வேகமாகப் பயணித்த தனியார் பஸ் நாயாத்து வழி பகுதியில் வீதியால் சென்று கொண்டிருந்த மாடுகளின் மீது மோதியுள்ளது.



இந்த விபத்தில் கூட்டமாக சென்ற மாடுகளில் 8 மாடுகள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தன. பல மாடுகள் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள சாலம்பன் கிராமத்தைச் சேர்ந்த பண்ணையாளர்களின் மாடுகள் மேய்ச்சலுக்கு கொண்டு செல்லப்பட்டு மீண்டும் மாட்டுத் தொழுவத்துக்குக் கொண்டு செல்லப்பட்ட போது விபத்து இடம் பெற்றுள்ளது.

பயணிகளுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து அதிவேகமாக வந்த தனியார் பஸ் கட்டுப்பாட்டை இழந்து மாடுகளின் மீது மோதியுள்ளது. இந்த நிலையில் விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தனியார் பஸ் சாரதியின் கவனயீனமே விபத்துக்குக் காரணம் எனவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு பொறுப்பற்ற விதத்தில் வாகனம் செலுத்துவோர் தொடர்பில் பொலிஸார் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவ இடத்துக்குச் சென்ற அடம்பன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.







# வவுனியா கருமாரியம்மன் ஆலயத்தில் சுனாமி நினைவு தினப் பிரார்த்தனை!

**கி.வசந்தரூபன்**

வவுனியா, குட்செட்வீதி, கருமாரியம்மன் ஆலயத்தில் 19 ஆம் ஆண்டு சுனாமி நினைவு தினம் இன்று காலை அனுஷ்டிக்கப்பட்டது.

இதன்போது, சுனாமியில் உயிர் நீத்த உறவுகளுக்காக மோட்ச தீபமேற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. விசேட பூசை வழிபாடுகளும் இடம்பெற்றன.

வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியமும், ஸ்ரீகருமாரி அம்மன் தேவஸ்தான பரிபாலன சபையினரும் இணைந்து இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.

இந்த நிகழ்வில் பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள், அந்தணர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.







# காணி விடுவிப்பு தொடர்பில் யாழில் பச்சைக்கொடி காட்டுவார் ஜனாதிபதி

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு




(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வரும் வேளை காணி விடுவிப்புக்கள் தொடர்பில் பச்சைக்கொடி காட்டப்படும் என்று கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவ்வாறு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"வனவள பாதுகாப்பு, வன ஜீவராசி திணைக்களம் என்வற்றின் கட்டுப்பாடுக்குள் உள்ள காணி விடுவிப்பு தொடர்பில் 11 கட்டங்கள் இருந்தன. அதில் 4 கட்டங்களே பூர்த்தியாகியுள்ளன. ஏனைய கட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அவைகள் எதிர்வரும் ஏப்ரல் மாத மளவில் 100 வீதம் சரிவரும் என்ற நம்பிக்கை உண்டு.

உயர் பாதுகாப்பு வலயமாகப் படைத்தரப்புக்களின் கட்டுப்பாட்டில் உள்ள காணிகளை விடுவிக்கத் தொடர்ந்து முயற்சிக்கின்றேன். முடிந்த வரையில் காணி விடுவிக்க நடவடிக்கைகளை எடுப்பேன்.

ஜனாதிபதி யாழ்ப்பாணம் வரும் வேளையில் காணிகளை விடுவிப்பது தொடர்பில் பச்சைக்கொடியைக் காட்டுவார்." – என்றார்.

அதேவேளை, "ஜனாதிபதியுடன் அண்மையில் வடக்கு – கிழக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நடத்திய சந்திப்பில் ஏன் நீங்கள் கலந்து கொள்ளவில்லை?" என அமைச்சரிடம் கேட்டபோது,

"வடக்கில் எம் மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகள் நிறைய இருந்தமையால் நான் வடக்கில் தங்கி இருந்தேன். அதனால் சந்திப்புக்குச் செல்லவில்லை. ஜனாதிபதியுடன் மக்களுக்காகத் தொலைபேசியில் கதைக்கக் கூடிய நிலையில் உள்ளேன். பல்வேறு தடவைகள் கதைத்தும் உள்ளேன். என் கட்சி சார்பில், கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபன் கலந்துகொண்டார்." – என்று பதில் அளித்தார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**சிறைக்கைதி...**

தாக்குதலுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயிரிழந்த கைதி கரவிட்ட, மொல்காவ பிரதேசத்தைச் சேர்ந்த பி.ஜி. சுனில் என்ற 46 வயதுடையவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேற்படி கைதி சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் பின்னர் நேற்றுமுன்தினம் களுத்துறை நாகொட போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் இன்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக களுத்துறை போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் களுத்துறை சிறைச்சாலை அத்தியட்சகர், களுத்துறை வடக்கு பொலிஸாருக்கு அறிவித்தார் எனவும், அதனைத் தொடர்ந்து இது தொடர்பில் விசேட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் களுத்துறை வடக்கு பொலிஸ் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

எனினும், உயிரிழந்த கைதி மீது தாக்குதல் நடத்தியவர்கள் சிறைக் காவலர்களா அல்லது சக கைதிகளா என்ற தகவலைப் பொலிஸார் இன்னமும் வெளியிடவில்லை.

**டெங்கு நோயாளர்களின்...**

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 11 மாத ஆண் குழந்தையொன்று நேற்று உயிரிழந்துள்ளது.

இந்த மாதத்தில் யாழ்ப்பாண மாவட்டத்தில் டெங்கு நோய் வேகமாக அதிகரித்துள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்த வருடம் உலகளவில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

**ஆறாத்துயரில்...**

செலுத்தப்பட்டது.

இதையடுத்து உறவுகளின் கண்ணீர் கதறல்களுக்கு மத்தியில் உணர்வுபூர்வமாக நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றது.

உடலங்கள் புதைக்கப்பட்ட இடங்களில் அவர்களின் உறவினர்கள் தீபம் ஏற்றி மலர் அஞ்சலி செலுத்தியதுடன் அவர்கள் விரும்பி உண்ணும் உணவுகளைப் படைத்து ஒப்பாரி வைத்து ஓலம் இட்டனர். இதனால் அப்பகுதி எங்கும் சோகமயமாகக் காட்சி அளித்தது.



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிகமான உயிர்கள் காவுகொள்ளப்பட்ட வடமராட்சி கிழக்கில் பிரதான நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

உடுத்துறை சுனாமி பொது நினைவாலயத்தில் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.



# யாழ். பல்கலையில் ஆழிப்பேரலை நினைவேந்தல்

(எஸ்.நிதர்ஷன்)

ஆழிப்பேரலையில் உயிர்நீத்த உறவுகளுக்கான 19ஆம் ஆண்டு நினைவேந்தல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று முன்னெடுக்கப்பட்டது.

பேரலையில் உயிர்நீத்த உறவுகளின் நினைவுருவப் படத்துக்கு அக வணக்கம் செலுத்தி ஈகைச் சுடரேற்றப்பட்டு மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இதன்போது மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இலங்கையில் 2024ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26ஆம் திகதி கோரத் தாண்டவம் ஆடிய சுனாமி ஆழிப்பேரலை அனர்த்தம் இடம்பெற்று இன்றுடன் 19 வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன.








நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நீதியை நீதி வழியில் நிலைநாட்டுங்கள்!

சரியானதைக் கூட தவறான வழிமுறையில் செய்தால் அது தவறுதான்.

நீதியை நிலை நாட்டுவதைக் கூட சட்டம் - ஒழுங்குப்படிதான் செய்ய வேண்டும். நீதியான விடயங்களை கூட முறையற்ற விதத்தில் செய்தால் அது அநீதிதான். அதை நியாயப்படுத்த முடியாது.

போதைப் பொருள் கடத்தல், விற்பனை, பாவனை போன்றவற்றுக்கும், பாதாள உலகக் கும்பல்களுக்கும் எதிராக என்ற பெயரில் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும் பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் ஆகியோரின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் 'யுக்திய' நடவடிக்கை தொடர்பில் பலத்த சர்ச்சைகள் எழுந்துள்ளன.

தினசரி பெருமளவு போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டன, அதனுடனும் பாதாள உலகக் கும்பலுடனும் தொடர்புடைய பல நூற்றுக்கணக்கானோர் கைது செய்யப்பட்டனர், அவர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டன அல்லது மடக்கப்பட்டன என்றெல்லாம் செய்திகள் பொலிஸ் தரப்பால் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அவற்றை ஒட்டி பல்வேறு தரப்புகளினாலும் அதிருப்திக் கருத்துக்கள் வெளியிடப்பட்டு வருகின்றன.

சர்ச்சைக்குரிய இந்த விடயங்களில் சம்பந்தப்பட்ட இந்த பொலிஸ்மா அதிபர் தமது பதவி நிலையில் விடயங்களை எட்டுவதற்கு எத்தகைய வழிவகைகளையும் நாடுவார் என்பது பிரபலமாக நாடறிந்த விடயம். உயர்நீதிமன்றமே அதை அடையாளம் கண்டு உறுதிப்படுத்தி இருக்கின்றது.

இலக்குகள், நோக்குகள் சரியானவையாக இருக்கலாம். நியாயப்படுத்தக் கூடியவையாகவும் இருக்கலாம். ஆனால் அவற்றை அடையும் மார்க்கமும் வழியும் நீதியானதாகத்தான் இருக்க வேண்டும். சட்ட ரீதியான அரசு ஒன்று சட்டத்திற்கு முரணான வழியில் இலக்கை அடைய முடியுமானால் அது அநீதியே. தவறே. குற்றமே.

மக்கள் வாய்மூடிப் பார்த்திருக்கின்றார்கள் அல்லது மௌனம் பேணி அங்கீகரிக்கின்றார்கள் அல்லது பாராட்டி வரவேற்கின்றார்கள் என்பதற்காக அநீதியான நடைமுறைகள் நீதியாகி விடா.

இப்படித்தான் தென்னிலங்கை அரசு வடக்கு கிழக்கில் புரிந்த யுத்த குற்றங்களும் மனித குலத்துக்கு விரோதமான கொடூரங்களும் அடிப்படை உரிமை மீறல்களும் கூட தென்னிலங்கையால் நியாயப்படுத்தப்பட்டன. இன்னும் நியாயப்படுத்தப்படுகின்றன. பயங்கரவாதிகளை அழிக்கின்றோம் என்ற பெயரில் அரச படைகள் புரிந்த மனிதக் கொலைக் கொடூரங்களும், மிருகத்தனமான செயற்பாடுகளும், குரூர நடவடிக்கைகளும் அரச பயங்கரவாதத்தின் உச்சம்.

அந்த அநீதிகளை - அட்டூழியங்களை - மனித கொடூரங்களை - பயங்கரவாதிகளை அழிக்கின்றோம் என்ற பெயரோடு இனவாதம் முலாம் பூசி, நியாயப்படுத்திய வேலை போன்றுதான் இப்போது பாதாள உலகக் குழுக்களுக்கும், போதைப்பொருள் கடத்தல் வர்த்தகம், பாவனைக்கு எதிராகவும் கண்மூடித்தனமாக நடப்பதாகக் குற்றம் சுமத்தப்படுகிறது.

இந்தக் குற்றச்சாட்டுகளைச் சமாளிக்கும் விதத்தில் -

"குற்றச்செயல்களில் ஈடுபட்டு வரும் குழுக்களுடன் தொடர்புகளைப் பேணி வரும் சில மதத் தலைவர்கள், பொலிஸாரின் நடவடிக்கைகளை விமர்சிக்கும் வகையில் பாசாங்கு செய்கின்றனர். அத்துடன் பொலிஸாரின் மன உறுதியைக் குறைக்கும் வகையில் சில அரசியல்வாதிகளும் செயல்படுகிறார்கள்" - என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் குறை கூறுகின்றமை அவதானிக்கத்தக்கது.

இத்தகைய சமூகப் பிரச்சினைகளை சட்டப்படி கையாளாமல், 'என்கவுண்டர்' கொலை நடவடிக்கைகள் மூலம் தீர்க்க எண்ணும் போக்கு பாதுகாப்புத் துறையில் தலை எடுத்திருப்பது பலரும் அறிந்ததே.

அத்தகைய போக்கில் விடயங்களை கையாள்வதை விடுத்து, நீதி - நேர்மை - சட்டத்தின் - பிரகாரம் இவை கையாளப்பட வேண்டும். அதுதான் சட்டத்தின் ஆட்சி. அதை மீறினால் அது பொலிஸ் அராஜகம்.

போதை பொருள் தொடர்பான குற்றத்தோடு ஒருவரை கண்மூடித்தனமாகத் தொடர்புபடுத்தினால் அதன் விளைவு மோசமானது. நிதானித்து, சிந்தித்து, உரிய ஆதாரங்கள் - சான்றுகளுடன் அத்தகைய நகர்த்தல்கள் முன்னெடுக்கப்பட வேண்டும். கூட்டத்தில் கும்மாளம் இடுவது பாணியில் அல்ல.



# சுனாமியால் உயிரிழந்தவர்களுக்கு யாழ். செயலகத்தில் சுடரேற்றி அஞ்சலி

(பிரபாகரன் டிலக்சன், எஸ்.நிதர்ஷன்)

யாழ். மாவட்ட செயலக அனர்த்த முகாமைத்துவ பிரிவின் ஏற்பாட்டில் தேசிய பாதுகாப்பு தினம் இன்று இடம் பெற்றது.

யாழ். மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் சூரிய ராஜா தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காகச் சுடர் ஏற்றி மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், யாழ். மாவட்ட அரச அதிபர் சிவபாலசுந்தரன், மாவட்ட பிரதி அரச அதிபர் பிரதீபன் மற்றும் மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.







# உடப்பு - பூனைப்பிட்டி பகுதியில் வர்த்தகர் ஒருவரது வீட்டில் திருட்டு!

## 70 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் அபேஸ்

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், உடப்பு - பூனைப்பிட்டி பகுதியில் உள்ள வர்த்தகர் ஒருவரது வீடொன்றில் இருந்து 70 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் மற்றும் பணம் என்பன நேற்று (25) அதிகாலை திருடப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

தங்க நகைகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்ட சமயத்தில் வீட்டில் எவரும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

தேங்காய் மற்றும் இறால் விற்பனையில் ஈடுபட்டுவரும் அந்த பிரதேசத்தின் வியாபாரியின் வீட்டிலேயே இந்தத் திருட்டு இடம்பெற்றுள்ளது என்று உடப்பு பொலிஸார் குறிப்பிட்டனர்.

அந்த வர்த்தகர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் நேற்று முன்தினம் இரவு வட்டவான் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் நடை பெற்ற நள்ளிரவு விஷேட நத்தார் ஆராதனை நிகழ்வில் கலந்து கொள்ளச் சென்று விட்டார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் நேற்று அதிகாலை (25) மீண்டும் வீட்டுக்கு வருகை தந்து பார்த்து போது, வீட்டில் உள்ள பொருள்களை அங்கும், இங்குமாக வீசப்பட்டிருந்துள்ளன. வீட்டில் இருந்த தங்க நகைகள் மற்றும் பணம் என்பனவும் திருட்டுப் பொயிருந்தன. இது பற்றி வீட்டின் உரிமையாளரான வர்த்தகர் பொலிஸ் முறைப்பாடு செய்துள்ளார்.

முறைப்பாட்டின் அடிப்படையில் சம்பவ இடத்திற்கு சென்ற உடப்பு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தம்மிக குலதூங்க தலைமையிலான பொலிஸ் குழுவினரும், பொலிஸ் புலனாய்வு பிரிவினரும் அங்கு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

தங்க நகைகள் மற்றும் பணம் என்பன திருட்டுப் போயிருந்த வீட்டின் ஜன்னல் உடைக்கப்பட்டுள்ளது. இதனூடாக உள்ளே சென்ற கொள்ளையர்கள் திருட்டில் ஈடுபட்டிருப்பது மேற்கொள்ளப்பட்ட ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அத்துடன், புத்தளம் பொலிஸ் தடயவியல் பிரிவினரும், கை ரேகை பரிசோதனை பிரிவினரும் சம்பவ இடத்துக்கு வருகை தந்து அங்கு விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் உடப்பு பொலிஸாருடன் இணைந்து, பொலிஸ் தடயவியல் பிரிவினரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.









# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்களது ஓட்டு வீடுகளை கல் வீடுகளாக மாற்றித் தாருங்கள்

## உலக இந்து ஆன்மிகக் கூட்டமைப்பின் சார்பில் வேண்டுகோள்

2023 புயல் – வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டு மக்களது ஓட்டு வீடுகளை, கல் வீடுகளாக மாற்றித் தரவும், இங்குள்ள மக்களின் பிள்ளைகளுக்குத் தனியார் துறை வேலை வாய்ப்புகளில் உரிய இடத்தைப் பெற்றுத் தரவும் தமிழ்நாடு அரசு முயற்சி எடுக்க வேண்டும்.

இவ்வாறு உலக இந்து ஆன்மிகக் கூட்டமைப்பின் சார்பில் வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு இறுதியில், தமிழ்நாட்டின் தலைநகர் சென்னை மற்றும் தூத்துக்குடி, நெல்லை மாவட்டங்களைக் கடுமையாக உலுக்கியெடுத்த புயல் மற்றும் வெள்ளப் பேரழிவில், தமிழ்நாட்டு மக்கள் பெரும் துன்பங்களைச் சந்தித்தனர். இந்த வேளையில், சுவிஸ் வாழ் தமிழ் நண்பர்களின் பேருதவியுடன் வேலுப்பிள்ளை கணேசகுமார் தலைமையிலான “உலக இந்து ஆன்மிகக் கூட்டமைப்பு” (World Spiritual hindu Foundation – WSHF) அமைப்பின் சார்பில், பல்வேறு இடங்களில் பேரழிவில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு 2 லட்சம் மதிப்பிலான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன. தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் பெ.மணியரசன் தலைமையிலான தமிழ்த்தேசியப் பேரியக்கத்தின் தோழர்கள், இந்த உதவிகளை உரிய மக்களிடம் கொண்டு சென்றனர்.

### வடசென்னை

சென்னையில், மிச்சாங் புயல் காரணமாக ஏற்பட்ட பெருமழையால் கடுமையாக பாதிக்கப்பட்டு, பலராலும் கவனிக்கப்படாமல் விடப்பட்ட பகுதி வடசென்னையாகும். ஏழை எளிய மக்கள் நிறைந்து வாழும் வடசென்னையின், புளியந்தோப்பு பகுதியிலுள்ள குருசாமி நகர், ராஜா தோட்டம், கே.எம். கார்டன் போன்ற இடங்களில், மழை நீர் கழுத்தளவு தேங்கிய நிலையில், அங்கு மக்கள் உணவு, குடி தண்ணீர் கூடக் கிடைக்காமல் கடும் இன்னல்களை எதிர்கொண்டனர்.

கழுத்தளவு தண்ணீர் தேங்கிய வீடுகளில், தங்கள் உடைமைகளை எல்லாம் இழந்து தவிக்கும் மக்கள் எவ்வித துயர் துடைப்புப் பணியும் நடைபெறாத நிலையில், விரக்தியில் வாடி வந்த நிலையில், கடந்த 12.12.2023 அன்று, உலக இந்து ஆன்மிகக் கூட்டமைப்பு சார்பில், வேலுப்பிள்ளை கணேசக்குமார் திரட்டிக் கொண்டு வந்த 150 இற்கும் மேற்பட்ட ஆண்கள் – பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான உடைகள் பொது மக்களுக்கு வழங்கப்பட்டன.

தமிழ்த் தேசியப் பேரியக்கத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் க. அருணபாரதி தலைமையிலும், அப்பகுதியின் செயல்பாட்டாளர் திரு. ஜீவா ஒருங்கிணைப்பிலும் இப்பணிகள் நடைபெற்றன.

### தூத்துக்குடி மாவட்டம்

அதேபோல், தமிழ்நாட்டின் தூத்துக்குடி – நெல்லை மாவட்டங்களில் மிகக் கடுமையான வெள்ள பாதிப்புகளை இங்குள்ள தமிழ் மக்கள் எதிர்கொண்ட நிலையில், மிகப் பெரும்பாலான பகுதிகள் ஒரு வாரம் கடந்த நிலையில் கூட வெள்ள நீர் நிறைந்து காட்சி அளித்தது. பல வீடுகள் இடிந்துள்ளன. தாமிரபரணி ஆற்று வெள்ளப் போக்கால் பல்வேறு கிராமங்கள் பாதிக்கப்பட்டு, மார்பளவு தண்ணீரில் சிக்கி உயிர் தப்பி வந்திருக்கிறார்கள்.

இப்பகுதி மக்களின் துயர் துடைக்கும் நோக்கில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் அரிசி, பருப்பு, சாம்பார் பொடி கொண்ட பைகளை வழங்க உலக இந்து கூட்டமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளர் வேலுப்பிள்ளை கணேசகுமார் ஒருங்கிணைப்பில் சுவிஸ் நண்பர்கள் பங்களிப்போடு வழங்கப்பட்டது.

கடந்த (23.12.2023) பிற்பகல் தொடங்கி மாலை வரை, திருச்செந்தூர், ஏரல் வட்டத்திலுள்ள சொக்கப்பழாங்கரை, திருத்து, சோழியக்குறிச்சி, காராவிளை, மயிலோடை, அங்கமங்களம் புதுக்கிராமம் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்களுக்கு வீடுவீடாகச் சென்று இந்தப் பொருள்கள் வழங்கப் பட்டன.

தமிழ்த்தேசியப் பேரியக்கத் தலைவர் பெ. மணியரசன், பொருளாளர் தோழர் ஆ. ஆனந்தன், துணைப் பொதுச் செயலாளர் தோழர் அருணபாரதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் கதிர்நிலவன் உள்ளிட்டோர் ஒவ்வொரு கிராமத்துக்கும் நேரில் சென்று அந்தக் கிராமத்து மக்களுடன் கலந்துரையாடி அவர்களின் துயர்களைக் கேட்டறிந்தார்.

மறுநாள் (24.12.2023) அன்று, திருச்செந்தூர் ஏரல் வட்டத்திலுள்ள – புறையூர், பன்னீர்புரம், வன்னார்விளை, கீழக்கல்லாம்பாறை ஆகிய கிராமங்களில் உள்ள மக்களுக்கு உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

### குலசேகரப்பட்டினம்

தூத்துக்குடி திருச்செந்தூர் வட்டத்திலுள்ள குலசேகரப்பட்டினத்தில், 24.12.2023 அன்று, கார்த்திக் ஒருங்கிணைப்பில், 30 குடும்பங்களுக்கு, அரிசி, பருப்பு போன்ற உலர் உணவுப் பொருள்கள் நேரடியாகச் சென்று வழங்கப்பட்டன.

### புழல் முகாம்

சென்னையை அடுத்துள்ள புழலில் செயல்பட்டு வரும் “இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில்” மிச்சாங் புயல் காரணமாக வாழ்வாதாரம் இழந்து பாதிக்கப்பட்ட, ஈழத்தமிழ் மக்களுக்கும் உதவிகள் வழங்கப்பட்டன.

சுவிசற்லாந்து வாழ் தமிழ் நண்பர்களின் பங்களிப்போடு, அரிசி, பருப்பு உள்ளிட்ட பொருட்கள், முகாமிலுள்ள 350 குடும்பங்களுக்கும் முகாம் அலுவலகத்தில் வைத்து வழங்கப்பட்டன. முகாம் செயலாளர் பத்மநாபன் மற்றும் நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர்.

தமிழ்த்தேசியப் பேரியக்கத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் க. அருணபாரதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் தோழர் வெற்றித்தமிழன், பொதுக்குழு உறுப்பினர் தோழர் பழ. நல். ஆறுமுகம், திருவள்ளூர் செயலாளர் தோழர் செயப்பிரகாசு, சென்னை நடுவண் கிளைச் செயலாளர் தோழர் மு. வடிவேலன் உள்ளிட்டோர் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.



# கிண்ணியாவில் சுனாமி நினைவு தினம்!

(ஹஸ்பர்)

சுனாமி தினமான இன்று (26) கிண்ணியா நகர சபையின் தோனா சிறுவர் பூங்காவில் சுனாமியால் உயிர் நீத்தவர்களுக்காக அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

கிண்ணியா பிரதேச செயலர் எம்.எச்.ஹனி தலைமையில் இடம்பெற்ற நினைவு தினத்தில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட செயலர் சாமிந்த ஹெட்டியாராய்ச்சி கலந்து கொண்டார். இதில் சுனாமியின் போது உயிரிழந்த உறவுகளுக்காக துஆ பிரார்த்தனைகளும் இடம் பெற்றன.



இதில் அனர்த்த முகாமைத்துவ நிலைய பிரதி பணிப்பாளர் கே.சுகுனதாஸ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், நகர சபை, செயலாளர் மற்றும் உத்தியோகத்தர்கள், இளைஞர் அமைப்புகள், பாடசாலை மாணவிகள், சமூக ஆர்வலர்கள், மதத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.



# மாளிகைக்காடு ஜனாஸா அமைப்பின் சுனாமி நினைவு தினப் பிரார்த்தனை

(நூருள் ஹுதா உமர்)

சுனாமி அனர்த்தம் இடம்பெற்று 19 வருட நினைவு தின துஆ பிரார்த்தனைகள், நினைவஞ்சலிகள் இன்று மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு ஏற்பாடு செய்த துஆ பிரார்த்தனை மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பு மண்டபத்தில் அமைப்பின் தலைவர் ஏ.எல்.எம். அன்வர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் குரான் ஓதி தமாம் செய்யப்பட்டதுடன் அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் முன்னாள் பிரதம இமாம் மௌலவி ஏ. எல். எம். மின்ஹாஜ் (உஸ்மானி) துஆ பிரார்த்தனை செய்தார். நினைவுரையை மௌலவி ஏ. எல். எம். அலீம் (காஸிமி) நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் காரைதீவு பிரதேச செயலர் எஸ். ஜெகராஜன், கிழக்கின் கேடயம் பிரதானி எஸ்.எம். சபீஸ், மாளிகைக்காடு கிழக்கு கிராம நிலதாரி ஏ.எம். நஜீம், அரச அதிகாரிகள், அந்நூர் ஜும்மா பள்ளிவாசல் நிர்வாகிகள், குரான் மதரஸா நிர்வாகத்தினர் மற்றும் மாணவர்கள், ஜனாஸா நலன்புரி அமைப்பின் உறுப்பினர்கள், சமூக பிரதிநிதிகள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு மர நடுகையும் இங்கு இடம் பெற்றது.

ஸ்ரீ லங்கா அல்- மீஸான் பௌண்டேசன் ஏற்பாடு செய்த நினைவுதின நிகழ்வுகள் சாய்ந்தருதில் அமைப்பின் தவிசாளரின் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் துஆ பிரார்த்தனை இடம்பெற்றதுடன் நினைவுரையும் இடம்பெற்றன.





# பூந்தோட்டம் நினைவுத் தூபியில் உணர்வு பூர்வமாக சுனாமி தினம்!

(கி.வசந்தரூபன்)

வவுனியா, பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயம் மற்றும் வவுனியா நகரசபையின் ஏற்பாட்டில் சுனாமி பேரலையில் உயிர் நீத்தவர்களுக்கான 19 ஆம் ஆண்டு அஞ்சலி நிகழ்வு இன்று இடம்பெற்றது.

பூந்தோட்டம் லயன்ஸ் விளையாட்டு கழக மைதானத்தில் அமைந்துள்ள சுனாமி நினைவு தூபியில் குறித்த பிரார்த்தனை நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது உயிரிழந்தவர்களுக்கு இரண்டு நிமிட அகவணக்கம் செலுத்தப்பட்டது. நினைவு தூபிக்கு மலர் மாலை அணிவித்து, மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

நினைவு தூபி சுனாமி பேரலை ஏற்பட்டு 31 ஆம் நாளில் நரசிங்கர் ஆலய நிர்வாகத்தினரால் அமைக்கப்பட்டது. இலங்கையின் முதலாவதாக அமைக்கப்பட்ட தூபியாகவும் விளங்குகின்றது. தற்போது நகரசபையால் புனர்நிர்மானம் செய்யப்பட்டு பராமரிக்கப்படுகின்றது.

நரசிங்கர்ஆலயத்தின் தலைவர் கோ.சிறிஸ்கந்தராஜா தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மதகுருமார்கள், பொதுஅமைப்பினர், கிராம மக்கள், சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.















# கண்ணீரில் மூழ்கிய உடுத்துறை!

சுனாமி ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் 19 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று வடமராட்சி கிழக்கு அவர்களது உறவுகளால் அனுஷ்டிக்கப்பட்டது.

உடுத்துறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினுடைய ஏற்பாட்டில் இன்று காலை வடமராட்சி உடுத்துறை நினைவாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பலரும் தமது உறவுகளுக்காக அஞ்சலித்தனர்.



சுனாமியால் உயிரிழந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட தூபிக்கு மாலை அணிவிக்கப்பட்டு 9.25 மணிக்கு பொதுச்சுடர் ஏற்றப்பட்டது. பிரதேச செயலர் பிரபாகர மூர்த்தி, யாழ். மாநகரசபை முன்னாள் ஆணையாளர் யோகேஸ்வரி பற்குணராசா, உடுத்துறை கடற்தொழிளாளர் சங்கத் தலைவர் ஜெயராமன் ஆகியோர் சுடர் ஏற்றினர்.

அதனைத் தொடர்ந்து உயிரிழந்தவர்களின் படங்களுக்கு மாலையிட்டு தீபங்கள் ஏற்றி உணவுகளை படையலிட்டு உறவுகள் அஞ்சலித்தனர்.

கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் மலரஞ்சலி செலுத்தினார்.

உடுத்துறை சுனாமி நினைவாலயத்தில் சுனாமிப் பேரலையால உயிரிழந்த கிட்டத்தட்ட 1200 இற்கும் மேற்பட்டோரின் உடல்கள் அடக்கம் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# கண்ணீரில் மூழ்கிய உடுத்துறை!

















படங்கள் : எஸ்.நிதர்ஷன்





# மன்னாரில் சுனாமி தின நிகழ்வு

(மன்னார் நிருபர்)

சுனாமி ஆழிப்பேரலையால் உயிரிழந்தவர்களின் 19 ஆவது ஆண்டு நினைவு நாள் இன்று (26) மன்னாரில் நினைவு கூறப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஏற்பாடு செய்த தேசிய பாதுகாப்பு தினத்தின் நினைவு நாள் இன்று செவ்வாய்க்கிழமை (26) காலை 9 மணியளவில் மன்னார் பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது மன்னார் பிரதேச செயலர் எம்.பிரதீப், சர்வமதத் தலைவர்கள்,திணைக்கள அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர். சுனாமியால் உயிரிழந்தவர்களை நினைவு கூர்ந்து தீபம் ஏற்றி மலர் தூவி மௌன அஞ்சலி செலுத்தினர்.






# சுனாமி நினைவாக மாபெரும் இரத்ததானம்!

(பழுவூரான்)

சுனாமியால் உயிர் நீத்த உறவுகளின் 19 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூரும் முகமாக, புதிய கோட்டைமுனை விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் "உதிரம் கொடுத்து உயிரைக் காப்போம்" எனும் தொனிப் பொருளில் மாபெரும் இரத்ததானம் இடம்பெற்றத.

இந்த நிகழ்வு இன்று செவ்வாய்க் கிழமை (26) கல்லடி திருச்செந்தூர் முதலாவது சுனாமி நினைவுத் தூபிக்கு அருகில் நாவலடி ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலை வைத்தியர் திருமதி கீர்த்தி மற்றும் தாதிய உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டு குருதிச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.



இதன்போது மட்டக்களப்பு புதிய கோட்டைமுனை விளையாட்டுக் கழக உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இரத்த தானம் செய்தனர்.

இரத்த தானம் செய்தோருக்கு இயற்கையின் மொழி அமைப்பின் ஸ்தாபகர் காயத்திரி உதயகுமாரால் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.



■ ஆர். நடராஜன் ஹரன்

## வலி நிறைந்த நாள்...!

# சந்ததிகளுக்கு சம்பவமாகிவிட்ட சுனாமி...!

உலகமே நத்தார் பண்டிகையில் களைகட்டி கொண்டாட்டங்கள் மலர்ந்து விட்ட நேரம் மக்கள் நள்ளிரவு ஆராதனையை முடித்து விட்டு வீடுவந்து அளவளவில் இன்புற்று காலை சிற்றுண்டிகளை பெற்றவாறு புதிய எதிர்பார்புடன் உண்டு மகிழ்ந்து கொண்டாடியிருந்தனர். உறவினர்கள் இல்லங்களை நாடி வருவதும் போவதுமென மகிழ்ச்சி வெள்ளம் தாண்டவமாடியது

இந்துக்கள் கூட திருவெண்பாவை பூஜையை ஆலயங்களில் முடித்து விட்டு வீடுகளுக்கு வந்து கொண்டிருந்தனர் ஆண்கள் மற்றும் உழைக்கும் பெண்கள் தமது அன்றாட கடமைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

2004 டிசெம்பர் 26ஆம் திகதி அதாவது கிறுஸ்மஸ் தினத்துக்கு மறுநாள் காலை 8 மணிவரை மக்கள் தமது இயல்பு வாழ்வுகளில் ஈடுபட்டிருந்தனர். கால நிலைகூட சீராக இருந்தது. 8 மணிக்கு பின்னரான காலகட்டமே மக்களின் வாழ்வைத் தலை கீழாகப் புரட்டிப் போட்டது என்பது இன்றைய இளைஞர்களுக்குச் சரித்திர நிகழ்வாக அமைந்து விட்டது.

இந்த சமுத்திரம் என்றுமில்லாதவாறு கொந்தளித்தது. சுமார் 40 முதல் 50 மீற்றர் உயரத்துக்கு கடல் அலைகள் சுழன்று பொங்கி எழுந்தன. கொடிய அரக்கனின் தோற்றத்தில் உருவெடுத்த கடற்கோள் தாமதியாது கரையேர பிரதேசங்களுக்குள் உட்புகுந்து நொடிப் பொழுதில் மக்களையும் ஏனைய உயிர் உடமைகளையும் ஈவு இரக்கமின்றி காவு கொண்டது. இந்தக் கடல் பேரலையில் உயிர் தப்பிய எமது உடன் பிறாவா உறவுகள் மத்தியில் ஆறாத ரணத்தை இது ஏற்படுத்திச் சென்றுவிட்டது.

கிறுஸ்மஸ் கொண்டாட்டங்களை எதிர் நோக்கி ஆட்டம் பாட்டம் போடவிருந்த மக்களின் வீடுகளில் மரண ஓலம். பல கடற்கரை பகுதிகளில் அமைந்திருந்த வீடுகளையே காணவில்லை. வீடு வாசலுடன் தோட்டம் துறவுகளையும் நீண்டு வளர்திருந்த மரம்களையும் காணமுடியாத நிலையில் மக்களை எங்கு சென்று தேடுவது .

தெற்கு ஆசிய நாடுகள் அனைத்திலும் 85 ஆயிரம் அப்பாவி மக்கள் சில நொடிப் பொழுதில் கடல் விழுங்கிவிட்டது. கடற்கரைகளை அண்டிய பகுதிகளில் உள்ள நிலையான கட்டடங்கள் யாவும் கடல் அலையால் தூக்கி எறியப்பட்டு சின்னா பின்னமாக்கப்பட்டன.

இவ்வாறு அழிவுகளை ஏற்படுத்திய சுனாமி கடற்கோள் எவ்வாறு தோற்றம் கண்டது என்று நோக்குகையில் எமது இலங்கைத் தீவிலிருந்து சுமார் இரண்டாயிரம் கிலோ மீற்றர் தொலைவில் உள்ள சுமாத்திரா தீவின் கடலுக்கு அடியில் உருவான பூகம்பத்தால் சுனாமி பேரலை தோன்றியுள்ளது அது பொங்கி எழுந்து சீறிப் பாய்ந்ததால் இந்தோனேசியா, தாய்லாந்து, அந்தமான், நிக்கோபர் தீவுகள், இலங்கை இந்தியா மாலைதீவு வட ஆபிரிக்கா நாடுகள் சிலவற்றின் கரையோரப் பகுதிகளை தாக்கி அளித்துள்ளது.

இலங்கை உட்பட படுமோசமாகத் தாக்கப்பட்ட நாடுகளில் உயிரற்ற வெற்றுடல்கள் நல்லடக்கம் செய்யப்படாமல் குவியல் குவியல்களால் பார்க்கும் இடமெல்லாம் காணப்பட்டன. இதனை நேரடியாகக் கண்டு உணர்தவர்கள் கரையோர வாழ் மக்களே. இந்த மனித உடல்கள் உள்ளூர் மக்களால் சேகரிக்கப்பட்டு ஒரே புதைகுழியில் போட்டு அடக்கம் செய்யப்பட்டன. ஆங்காங்கே குவியல் குவியலாக இரண்டு மூன்று தினங்களுக்கு மேல் கிடந்த மனித உடல்கள் புல்டோசர்களால் சேகரிக்கப்பட்டு பாரிய கிடங்குள் வெட்டப்பட்டுப் புதைக்கப்பட்டமை வரலாற்று நிகழ்வு.

சுமாத்திராவின் வடமுனை மானிலமான அச்சே முற்று முழுதுமாக அழிவுக்குள்ளாகியது. தீவுக்கூட்டங்களில் ஒன்றிணைந்த இந்தோனேசியாவில் 2004 பூகம்பத்தினால் சில தீவுகள் சுமார் 20 மீற்றர் கடலுக்குள் நகர்ந்து விட்டதாகவும் இதனால் உலக வரை படத்தில் கூட சிறிய மாற்றங்கள் ஏற்பட

(16ஆம் பக்கம் பார்க்க)





# சந்ததிகளுக்கு சம்பவமாகிவிட்ட சுனாமி...!

(15ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டிய நிலை உருவாகியுள்ளதாகவும் பூகற்பவியலாளர்கள் கூறியுள்ளனர்.

இலங்கையில் கடற்பேரலையால் அம்பாறை மாவட்டத்திலேயே கூடுதலான உயிர் அழிவுகள் ஏற்பட்டது. அதற்கு அடுத்தபடியாகக் காலி, அம்பாந்தோட்டை மாவட்டமே உள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கணிசமான தொகையில் சுமார் பத்தாயிரத்துக்கு அதிகமானவர்கள் மாண்டு போனார்கள். சுனாமி பேரலையால் ஏற்பட்ட இழப்பு நெஞ்சை உறையவைக்கும் கொடுமையிலும் கொடுமை எனலாம்.

கடற்கரை மணலில் உல்லாசமாக நடைபவனியில் ஈடுபட்டிருந்த உள்ளூர் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள், கிரிக்கெட் விளையாட்டில் ஈடுபட்டிருந்த சிறுவர்கள், தேவாலயங்களில் ஞாயிறு நத்தார் ஆராதனையில் கலந்து கொண்டிருண்டிருந்தோர், இந்து ஆச்சிரமங்களில் தமது காலை அனுஸ்டானங்களில் ஈடுபட்டிருந்த சிறுவோர் முதியோர்கள் அனைவருமே அபயக் குரல் எழுப்பிய நிலையிலேயே சுனாமி பேரலை கடலுக்குள் இழுத்துச் சென்றுவிட்டது. சிலரது வெற்றுடல்கள் கூட கண்டுபிடிக்கப்படாமலேயே இறுதி அஞ்சலிகளை இன்றுவரை உறவுகள் நடத்திக் கொண்டு வருகின்றனர்.

சுனாமி அலையானது ஒரு விநாடிக்கு இருநூறு தடவை சுழல்வதால் கடலுக் குள் இருந்து மண்ணையும் , சுரிகளை யும் சுருட்டி எடுத்துக் கொண்டு கரை யைக் கடந்து ஊருக்குள் பிரவேசித்து விடுகின்றது.

எமது இலங்கையில் சுனாமி பேரலையானது சுமார் இருநூறு மீற்றருக்கு தமது முழுமையான ஆதிக்கத்தைச் செலுத்தி உள்ளது. 26.12.2004 காலை 06.30 மணிக்கு ஏற்பட்ட பூகம்பம் 123 ஆண்டுகள் கழிந்து இந்து சமுத்திரத்தில் ஏற்பட்டுள்ளது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

கடந்த 2004 டிசெம்பர் 26 கடற்கொந்தழிப்பால் அம்பாறை மாவட்டத்தின் கடற்கரைப் பிரதேசங்களே மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. இதில் பெரியநீலாவணையிலிருந்து பொத்துவீல், அறுகம்பை வரையான நீண்ட பிரதேசங்களில் நிகழ்ந்த பெரும் எண்ணிக்கையான மரணங்களில் சுமார் 85 வீதமான மரணங்கள் கல்முனை பிரதேசத்திலுள்ள மருதமுனை, பாண்டிருப்பு, கல்முனை, கல்முனைக்குடி, சாய்ந்தமருது, காரைதீவு ஆகிய ஆறு கிராமங்களிலேயே நிகழ்துள்ளன.

எஞ்சிய மரணங்கள் நிந்தவூர், அட்டாளைச்சேனை, ஒலுவில், அக்கரைப்பற்று, ஆலையடிவேம்பு சின்னமுகத்துவாரம், திருக்கோவில், தம்பட்டை, தம்பிலுவில், கோமாரி, பொத்துவில், வினாயகபுரம், உமிரி அறுகம்பை, உல்லை, ஆகிய பிரதேசங்களில் நிகழ்ந்துள்ளன.

இந்த நிகழ்வில் 10500 இற்கும் மேற்பட்டோர் மாண்டு போனர் என்றும் சுமார் முப்பதாயிரத்துக்கும் அதிகமானோர் காயங்களுக்கு சிகிச்சை பெற்றுக் கொண்டனர். கடற்கரையில் இருந்து 200 மீற்றர் தூர இடை வெளியில் அமைந்திருந்த குடியிருப்பு மனைகள் அழிவடைந்தும் பகுதியளவில் சேதமானதாகவும் பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் எம்.ஏ.நுஃப்மாந் தனது சுனாமி கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார் .

கல்முனை பிரதேசத்திலுள்ள மேற்குறிப்பிட்ட ஆறு கிராமங்களும் இலங்கையின் அதிக குடிசன அடர்த்தியான பிரதேசங்களாகும். இக்கிராமங்கள் யாவும் கடற்கரைக்குச் சமீபமாக அமைந்திருந்தமையே பேரழிவுக்குக் காரணமாகும். இவை தவிர்க்க முடியாதவையே.

2004.12.26 அன்று கரையோர வாழ் மக்களில் உழைப்பாளிகள் தமது நாளாந்த கடமைகளில் வீடுகளில் இருந்து ஆண்களும் , பெண்களும் வெளியே சென்று விட குடும்ப பெண்கள், குழந்தைகள், முதியவர்கள் மட்டுமே எஞ்சியிருந்தனர்.

இந்த நேரத்தில் கடற்கரையைக் கடந்து கடலலை ஊருக்குள் வருகின்றது.

ஓடுங்கள் ஓடுங்கள் என்ற கூக்குரல் நாற்திசைகளும் கேட்கின்றன. இதை மக்கள் அவ்வளவாக பொருட்படுத்தவில்லை. இளைஞர்களும், சமூக ஆர்வலர்களும் படப்பிடிப்பாளர்களும் புகைப்பட ஊடகவியலாளர்களும் வீடுகளில் இருந்து அவசர அவசரமாக கடற்கரைப் பக்கமாக விரைவாக ஓடி வேடிக்கை பார்க்கின்றார்கள். முதலாவது அலை கரையைக் கடந்து ஊருக்குள் புகுந்தது இது அவ்வளவு பாரிய சேதங்களை ஏற்படுத்தவில்லை சுமார் 15 நிமிட இடைவெளியில் பாரிய அலை வானைத் தொடுமளவு விரைந்து கரையை நோக்கி வந்து கொண்டிருகின்றது. வேடிக்கை பார்த்தவர்களையும் இது அள்ளிச் சென்றது.

வீடுகள் நீரில் அள்ளுண்டு தோனியாக மாறி மிதந்தன.திக்குத் திசை காணாமல் போய்விட்டது. தாயின் மடியில் கைகளில் இருந்த பச்சிளம் குழந்தையைக் கண்ணெதிரே கடலலை பறித்து சென்றது.

எங்கும் மரண ஓலம். மக்கள் இருந்த வீடு வாசல்களைக் காணவில்லை. மக்கள் திசை கெட்டு பல்வேறு பக்கமும் ஓடிக் கொண்டிருக்கின்றார்கள். கடலலையின் கோரப்பிடிக்குள் சிக்கி இறந்தவர்கள் போக ஏனையவர்கள் 2014.12.26 மதியத்துக்குப் பின்னர் மேட்டுப்பாங்கான உயந்த இடங்களில் ஒன்று கூடி செய்வதறியாது தடுமாறிய வண்ணம் யார் யாரை தேடுவது என்பது

(17ஆம் பக்கம் பார்க்க)



# சந்ததிகளுக்கு சம்பவமாகிவிட்ட சுனாமி...!

(16ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரியாது பிரமை பிடித்த நிலையிலேயே வட கிழக்கு கரையோர மக்கள் அன்று இருந்தனர். இதன் வலி வேதனைகள் அன்று நேரிடையாக அனுபவித்தவர்களுக்கு புரியும்.

அன்றைய சுனாமி பேரலையால் கடல் அலையில் அள்ளுண்டும் திக்குத் திசை தெரியாது மூச்சடைத்து மாண்டவர்களே அதிகம். நடுக்கடலில் நின்ற பெரிய ஆள் கடல் மீன்பிடி படகுகள் மற்றும் அதில் பயணம் செய்தவர்களும் பத்திரமாக் கரைதிருப்பியிருந்தனர். அந்தத் தருணத்தில் தாம் ஆள்கடலில் மணல் திட்டுக்களை கண்டதாகவும் தமது வள்ளம் மண்ணில் தரை தட்டி சில மணிநேரங்களில் மீண்டும் நீர் மட்டம் சடுதியாக உயர்ததாதவும் அனுபவித்தவர்கள் தெரிவித்தனர்.

கடல் கரைப் பகுதிகளில் காணப்படும் பனை மரங்கள் அலைகள் எவ்வளவு தூரத்துக்கு மேல் எழுந்தது என்பதை உணர்த்தின. இன்று தலை விழுந்த பனை மரங்கள் கடற்கரை பகுதிகளில் எமக்கு கண்ணூடாக காணும் காட்சியாக இருக்கின்றன.

மனித பேரவலம் ஒன்று நிகழ்த போது சகல விதமான விருப்பு வெறுப்புகளையும் மறந்து மனித நிலைக்கு வந்து விடுவர். இதுவே நியதியும் யதார்த்தமுமாகும். சுனாமி ஏற்பட்ட போது எமது நாட்டில் கொடிய யுத்தம் நிலவிய காலகட்டம் தமிழ் மக்கள் பாதுகாப்புப் படையினரைக் கண்டு ஓடி ஒழிந்த காலப் பகுதியாகும்.

இதே போல் படையினர் தமிழ் பேசும் மக்கள் எவரையும் அன்றைய காலகட்டத்தில் நம்பத் தயார் இல்லை. இரு தரப்பும் இரு துருவம். ஆனால் சுனாமி அலை தாக்கி அழித்த அன்று அக் கரைப்பற்று ஆலையடிவேம்பு கடற்கரைக்கு மிக அண்மித்ததாக இருந்த விசேட அதிரடிப்படை முகாம் கடல் அலையால் மிக மோசமாகத் தாக்கப்பட்டது. படையினரையும் நிலைகுலைய வைத்தது. படையினர் உடுத்த உடையுடன் கடல் நீர் தலையில் இருந்து சொட்ட சொட்ட தமிழ் மக்கள் வாழும் பகுதிக்கு (கண்ணகிபுரம்) படைத் தள பாடங்களுடன் வந்து சேர்ந்து கண்ணகிபுரம் பாடசாலையில் தஞ்சமடைந்தனர். படையினரின் பாதுகாப்பான வெளியேற்றத்துக்கு தமிழ் இளைஞர்கள் அன்று பேருதவி செய்தனர்.

இதே போன்று அன்றிரவு வீதியோரங்களிலும் ஆலயங்களிலும் உயரமான மலைகளிலும் உணவு நீரின்றி அல்லற்பட்ட தமிழ் மக்களுக்கு உடனடியாகச் சமைத்த உணவுகள் வழங்கப்பட்டன. தேவையான முதலுதவிகளும் படையினரால் வழங்கப்பட்டன. இது போல அனைத்துப் பகுதிகளிலும் இன, மத, மொழி வேறுபாடு இன்றி மனிதர்கள் மனிதப் பண்புடன் ஒருவருக்கு மற்றையவர் உதவிக் கரம் நீட்டியதை மறக்கமுடியாது. வரலாற்று உண்மை. இதுவே மனித இனத்தின் அடையாளம்.

சுனாமி தாக்கி அழித்த ஒரு மணி நேரம் ஒவ்வொருவரும் தமது உடன் பிறப்புக்களையும் உற்றார் உறவினர் களையும் தேடும் பணிகளிலேயே தமது அன்றைய பொழுதைக் கழித்தனர். இதற்கு உதாரணமாக அலைபேசிகள் சில மணி நேரங்கள் தொடர்பு எட்ட முடியாத நிலமைக்கு தள்ளப்பட்டிருந்தன.

இத் தேடுதலானது ஒரு மாதம்வரை நீடித்தது. ஏன் வருடங்கள் கடந்தும் உள்ளது. கடலலை கொண்டு சென்றவர்கள் போக, ஏனையோர் குடும்பங்களுடன் இணைந்து கொண்டனர். கடல் தாயின் மடியில் ஆழ்ந்த உறக்கத்தில் இருப்பவர்களுக்காக இன்றுவரை பிரார்த்தனை இடம்பெற்று வருகின்றது.

இந்தக் கடற்சீற்றத்தால், கடலை நம்பி ஜீவனோபாயம் நடத்திய மீனவர்கள் – அந்தச் சமுதாயம் பாரிய உடமை – உயிர் இழப்புகளை சந்தித்துள்ளது.

இதே நேரம் நத்தார் விடுமுறையுடன் தமது உறவுகளை காண பல்வேறு பரிசுப் பொதிகளுடன் பல கனவுகளுடன் கொழும்பில் இருந்து அம்பாந்தோட்டை வரை செல்லும் தென் கரையோர ரயில் என்றுமில்லாதவாறு அதிக சன நெரிசல் நிறைந்ததாகப் பயணித்துக் கொண்டிருந்த போது – ரயில் பெரலிய என்ற இடத்தை அன்மித்த போது – கடலலை ஒன்று ரயிலில் மோதியது. பெட்டிகள் சின்னா பின்னமாகிக் கடலுக்குள் இழுத்துச் செல்லப்பட்டன.

மக்கள் கடலுடன் சங்கமமானார்கள். இதில் ஒரு சில பேர் தப்பித்துள்ளனர் என கூறப்படுகின்றது. இதில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்திருக்கலாம் என்ற நிலையில் 600 உடலகளையே மீட்புக் குழுவினர் மீட்டிருந்தனர். இவ் ரயில் விபத்து ஆசியாவில் நடந்த பாரிய பேரழிவாகக் கொள்ளப்படுகின்றது.

வடக்கு – கிழக்கைத் தாக்கிய அந்த சுனாமி அலை தென் பகுதி நகரான காலி – கோட்டைவரை தமது ஆதிக்கத்தைச் செலுத்தியுள்ளது. காலி – கோட்டை சுற்று வட்டாரத்தில் அமைந்துள்ள சகல வர்த்தக நிலையங்களும் அழிவுக்குள்ளானது. இந்த நிலையில் அதன் பின்னர் நிகழ்ந்த அனர்த்தங்களைக் கூட கணிக்க முடியாத நிலையில் எமது நாடு உள்ளமை வேதனை தரும் விடயம்.

அனர்த்தங்களை முன்னரே கணிப்பதன் ஊடாக மனிதப் பேரவலம் ஏற்படுவதில் இருந்து தவிர்த்துக் கொள்வதுடன் நாட்டின் பொருளாதாரத்தையும் ஓர் ஸ்திரத்தன்மையில் பேணமுடியும்.

இலங்கை வாழ் மக்கள் சுனாமி என்ற கடல் அரக்கனின் அழிவுகளை 2004 இல் கண்டு அனுபவித்து விட்டோம். எதிர்காலத்தில் இன்றைய கால நிலை மாற்றத்தால் ஏற்படப் போகும் இயர்கை அழிவுகளில் இருந்து மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை ஆட்சியாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

# பிரான்ஸில் தடுத்து வைக்கப்பட்டிருந்த விமானம் இந்தியாவை சென்றடைந்தது

## பயணிகளிடம் சி.ஐ.எஸ்.எவ். அதிகாரிகள் விசாரணை



மனித கடத்தல் அச்சம் காரணமாக பிரான்ஸ் விமான நிலையத்தில் பல நாட்களாக தடுத்து வைக்கப்பட்டிருந்த சுமார் 276 இந்திய பிரஜைகளை ஏற்றிச் சென்ற விமானம் இந்தியாவை சென்றடைந்துள்ளது.

இந்த நிலையில் ஆள் கடத்தலில் ஈடுபட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக பயணிகளிடம் மத்திய தொழில் பாதுகாப்புப் படை (சி.ஐ.எஸ்.எவ்) அதிகாரிகள் விசாரணை நடத்தியுள்ளனர்.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் இருந்து நிகரகுவாவுக்குப் பயணித்த ஏ340 ரக விமானம், பாரிஸின் கிழக்கே உள்ள சாலோன்ஸ் –வோட்ரி விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக தரையிறக்கப்பட்ட நிலையில் அதிகாரிகளால் அந்த விமானம் தடுத்து நிறுத்தப்பட்டது.

அதில் பயணித்த சில பயணிகள் மனித கடத்தலால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து குறித்து விமானம் தடுத்து நிறுத் தப்பட்டதாக பிரான்ஸ் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், விமானத்தில் இருந்தவர்களில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். பலர் பிரான்சில் தஞ்சம் கோரியதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இவ்வாறு தஞ்சம் கோரியவர்களில் பெரும்பாலானோர் ஐக்கிய அரபு இராச்சியத்தில் பணியாற்றிய இந்திய பிரஜைகள் என நம்பப்படுகின்றது.

இந்த விமானத்தில் இருந்தவர்கள் அமெரிக்கா அல்லது கனடாவுக்குள் நுழைவதற்கு முன்பு நிகரகுவாவுக்குப் பயணம் செய்திருக்கலாம் என பிரான்ஸ் அதிகாரிகள் சந்தேகிக்கின்றனர்.

இந்த நிலையில், மேற்படி விமானம் நிகரகுவாவிற்கு அனுப்பப்படாமல் இந்தியாவின் மும்பை விமான நிலையத்துக்கு அனுப்பப்பட்டமைக்கான காரணங்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

இந்திய நேரப்படி இன்று அதிகாலை விமானம் மும்பை விமான நிலையத்தை சென்றடைந்தது.

இதையடுத்து, ஆள் கடத்தலில் ஈடுபட்டிருப்பதாக சந்தேகம் எழுந்ததால், இந் தியா வந்தப் பயணிகளிடம் மத்திய தொழில் பாதுகாப்புப் படை (சி.ஐ. எஸ்.எவ்) அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். ஒரு சிலர் வீட்டுக்கு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

பெரும்பாலான பயணிகள் விமான நிலையத்தை விட்டு வெளியேறும் போது, ஊடகவியலாளர்களின் கேள்விகளைத் தவிர்க்க முயன்றனர். இந்த விமானத்தில், பயணித்தவர்களில் பெரும்பாலானவர்கள் இந்தியர்கள் என்றும் இந்தி மற்றும் தமிழ் பேசக்கூடியவர்கள் என்றும் கூறப்படுகிறது.

பிரான்சில் உள்ள இந்தியத் தூதரகம் தனது எக்ஸ் தளத்தில், "இந்தியப் பயணிகள் வீடு திரும்புவதற்கும் உதவிய வர்களுக்கு நன்றி" எனத் தெரிவித்துள்ளது.

# எந்த தேர்தல் நடத்தப்பட்டாலும் அ.தி.மு.க கூட்டணிக்கே வெற்றி!

## - அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி தெரிவிப்பு




"அடுத்து எந்த தேர்தல் வந்தாலும் அ.தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும். தி.மு.கவுக்கு இறங்குமுகம் தொடங்கி விட்டது. மக்களவைத் தேர்தலுக்கு முன் திமுக அமைச்சர்கள் பலர் இருக்க வேண்டிய இடத்தில் இருப்பார்கள்."

– இவ்வாறு அ.தி.மு.க. பொதுக்குழு கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி பேசியுள்ளார்.

அ.தி.மு.க. பொதுக்குழு மற்றும் செயற்குழுகூட்டம்சென்னைவானகரத்தில் இன்று காலை தொடங்கியது. அ.தி.மு.க. அவைத்தலைவர் தமிழ்மகன் உசேன் தலைமையில் கூட்டம் தொடங்கியது. இந்தக் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி சிறப்புரை ஆற்றினார். இதன்போது அவர் பேசுகையில்,

"அ.தி.மு.க. மாநாடு ஓகஸ்ட் மாதம் மதுரையே குலுங்கும் அளவுக்கு நடந்து முடிந்தது. எதிரிகள் அஞ்சுகின்ற அளவுக்கு நடந்த மதுரை மாநாட்டை பற்றி, உதயநிதி ஸ்டாலின் விமர்சித்து பேசியிருக்கிறார். உதயநிதி சொன்னதில் இருந்து திமுகவின் சேலம் மாநாடு மூன்று முறை தள்ளிவைக்கப்பட்டுவிட்டது. அ.தி.மு.கவை விமர்சிக்கும்போதே உங்களுக்கு இந்த பாதிப்பு ஏற்படுகிறது. அரசியல் கத்துக்குட்டியாக இருந்து கொண்டு அ.தி.மு.கவை விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. உதயநிதிக்கு நாவடக்கம் தேவை.

அ.தி.மு.க. உயிரோட்டமுள்ள கட்சி. எந்த கொம்பனாலும் அ.தி.மு.கவை ஒழிக்கவோ, முடக்கவோ, ஒடுக்கவோ முடியாது. சோதனை மேல் சோதனைகளை சந்தித்த கட்சி. எத்தனை வழக்குகள், எத்தனை சிக்கல்கள். அ.தி.மு.கவை முடக்க எதிரிகளோடு கைகோர்த்து துரோகிகளும் இணைந்து கொண்டார்கள். எவ்வளவோ முயற்சி செய்தும் அத்தனையும் வென்று காட்டினோம். ஒவ்வொரு முறையும் பொதுக்குழு நடைபெறும் போதெல்லாம் ஏதோ ஒரு பதற்றத்தோடு பொதுக்குழுவில் நாம் சந்திப்போம்.

ஆனால் இந்த பொதுக்குழுவில் அனைவரின் முகத்திலும் மகிழ்ச்சி பொங்குகிறது. நீதிமன்றத்திலும் நீதி வென்றுவிட்டது. தேர்தல் ஆணையத்திலும் நமக்கு அங்கீகாரம் கிடைத்துவிட்டது. இனி அ.தி.மு.க. ஜெட் வேகத்தில் செயல்படும்."

– என்றார்.

# நைஜீரியாவில் ஆயுதக் குழு கொலைவெறித் தாக்குதல்! - 113 பேர் பலி, 300 பேர் காயம்



நைஜீரியாவின் மத்தியப் பகுதியில் ஆயுதம் தாங்கிய குழுவினர் நடத்திய கொலைவெறித் தாக்குதலில் 113 பேர் உயிரிழந்தனர். 300 பேர் காயமடைந்தனர். பலர் வீடு, உடைமைகளை இழந்து தவிக்கின்றனர்.

நைஜீரியாவின் மத்தியப் பகுதியில் ப்ளேட்டு எனும் மாகாணம் உள்ளது. இந்தப் பகுதி இனக் கலவரங்கள், மத மோதல்கள், அரசியல் கிளர்ச்சிகள், கால்நடை மேய்ச்சலில் ஈடுபடுவோருக்கும் - விவசாயிகளுக்கும் இடையேயான மோதல்கள், கொள்ளைக்காரர்களின் தாக்குதல்கள் என பல இன்னல்களுக்குப் பெயர் போன பிரதேசமாக இருக்கிறது.

அந்தப் பகுதியால் எப்போதுமே நைஜீரிய அரசுக்கு தலைவலிதான் என்பது போல் சர்ச்சைகள் இல்லாத நாள் இல்லை எனும் அளவுக்கு அங்கே கலவரங்கள் நடைபெறுவது வழக்கம். அதுபோலத்தான் கடந்த ஞாயிறு ப்ளேட்டு பகுதியில் ஒரு தாக்குதல் நடைபெற்றது.

முதற்கட்டமாக இந்தத் தாக்குதலில் 16 பேர் பலியாகினர் என அரச செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட நிலையில் இன்றைய நிலவரப்படி 113 பேர் உயிரிழந்துள்ளனர் என உறுதியாகியுள்ளது. இதனால் அசம்பாவிதங்களைத் தடுக்க அங்கே நைஜீரிய இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து உள்ளூர் அரசாங்கம் தரப்பில், “கடந்த மே மாதத்துக்குப் பிறகு மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடந்துள்ளது. 20 வெவ்வேறு சமூகங்கள் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளன. இதுவரை 113 உடல்களைக் கைப்பற்றியுள்ளோம். 300 பேர் காயமடைந்துள்ளனர்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்தத் தாக்குதலில் ஈடுபட்டது யார் என்பது பற்றி எந்த விவரமும் தெரிவிக்கவிக்கப்படவில்லை. காயமடைந்தவர்கள் பல்வேறு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# காசாவில் உள்ள இஸ்ரேலிய துருப்புக்களை சந்தித்தார் இஸ்ரேலிய பிரதமர் நெதன்யாகு







ஹமாஸ் தரப்பினர் முழுமையாக அழிக்கப்படும் வரையில் காசாவில் போர் தொடரும் என இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

வடக்கு காசாவில் உள்ள இஸ்ரேலிய துருப்புக்களை சந்தித்த பின்னர் அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

போர் இன்னும் வெகு தொலைவில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை உட்பட உலக நாடுகள் போர் நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் இஸ்ரேலிய பிரதமரின் இந்த கருத்து வெளியாகியுள்ளது.

இராணுவ அழுத்தத்தை பிரயோகிக்காமல் ஹமாஸ் தரப்பினரால் தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக் கைதிகளை விடுவிக்க முடியாது எனவும் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

# மாபெரும் மார்கழி இசை விழாவும் வடமாகாண உற்பத்தி விற்பனையும்

**(எஸ்.நிதர்ஸன்)**

மாபெரும் மார்கழி இசை விழாவும் வடமாகாணத்தைச் சேர்ந்த சிறிய, நடுத்தர உற்பத்தியாளர்களது கண் காட்சியும் விற்பனையும் மற்றும் வெளி நாட்டுக்கான சந்தைவாய்ப்பும் யாழ்ப் பாணத்தில் மார்கழி 27, 28, 29 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

இந்தத் தினங்களில் மாலை 4.45 முதல் இரவு 9.15வரை மார்கழி இசை விழா நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வர்த்தகக் கண்காட்சியானது நாளை புதன்கிழமை (27) காலை 10 மணிக்கு உத்தியோக பூர்வமாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வை இந்தியத் துணைத் தூதரகம், நல்லூர் சைவத்தமிழ் பண் பாட்டுக் கலைக் கூடல் மற்றும் யாழ். வணிகர் கழகம் என்பன இணைந்து யாழ். மத்திய கலாசார மண்டபத்தில் நடத்தவுள்ளன.

இந்த நிகழ்வில் புகழ்பூத்த இலங் கைக் கலைஞர்கள், இந்தியக் கலை ஞர்கள் பங்கு பற்றவுள்ளனர். தவில் நாதஸ்வர இசைச்சங்கமம், விரலோசை வயலின் கச்சேரி, நாதசங்கமம், விர லிசை கானம், நாட்டிய நாடகம், மற்றும் இந்தியக் கலைஞர்களின் பரதநாட்டிய நடன நிகழ்ச்சி, நாட்டுக்கூத்து போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அதேவேளை மண்டபத்தின் வெளிப் புறத்திடலில் காலை 9 மணிமுதல் இரவு 9.30 வரை சுமார் 140 காட்சிக் கூடங்கள் அமைக்கப்பட்டு வடமாகா ணத்தைச் சேர்ந்த ஐந்து மாவட்டங் களையும் சேர்ந்த சிறிய நடுத்தர உள்ளூர் உற்பத்தியாளர்களின் தரம் வாய்ந்த உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும், விற்பனையும் ஏற்பாடு செய்யப்பட்டுள் ளது. வெளிநாட்டுக்கான சந்தை வாய்ப்பும் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

இது வடமாகாணத்தைச் சேர்ந்த உற்பத்தியாளர்களின் மாபெரும் கண்காட்சியாக அமையவுள்ளது. இந்த இரு நிகழ்வுகளுக்கான பிரவேசம் இலவசமானது.

ஆகவே வடமாகாண மக்களின் கலை கலாசாரப் பண்பாட்டு விழுமியங் களைப் பாதுகாக்கும் இசை நிகழ்விலும் மற்றும் வடமாகாண உள்ளூர் உற்பத் தியை மேம்படுத்துவதன் மூலம் தேசிய பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும் உள்ளூர் உற்பத்தியாளர்களை மேம்படுத்தும் நோக்கில் நடைபெற இருக்கும் வர்த்தகக் கண்காட்சியிலும் பொது மக்களைக் கலந்து கொள்ளுமாறு யாழ். வணிகர் கழகம் அழைப்பு விடுத் துள்ளது.



## வவுனியா பட்டானிச்சூரில் விபத்தில் ஒருவர் படுகாயம்

**(கி.வசந்தரூபன்)**

வவுனியா, பட்டானிச்சூர் பகுதியில் இரு மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் முதியவரொருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள் ளார்.

பட்டானிச்சூர் பாடசாலையை அண்மித்த பகுதியில் நேற்று (25) மதியம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வவுனியா நகரில் இருந்து மன்னார் வீதியூடாக முதியவரொருவர் செலுத்தி வந்த மோட்டார் சைக்கிள் வீதியின் மறுபக்கம் மாற முற்பட்ட வேளை அதே திசையில் வந்த அதிவேக சீசியுடைய மோட்டார் சைக்கிள் முதியவர் செலுத்திய மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டு விபத்துக் குள்ளானது.

இந்த விபத்தில் முதியவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்துக்குள்ளான இரு மோட்டார் சைக்கிளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

சம்பவ இடத்துக்கு விரைந்த வவுனியா மற்றும் நெளுக்குளம் போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

## அமைதியான முறையில் நள்ளிரவு ஆராதனை!

**(பழுவூரான்)**

மட்டக்களப்பில் இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் குறிக்கும் 2023 இற்கான கிறிஸ்மஸ் பண்டிகையின் நள்ளிரவு ஆராதனைகள் நேற்று திங்கட்கிழமை (25) மட்டக்களப்பு புனித மரியாள் தேவாலயத்தில் இறை சிந்தனையுடன் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் பொன்னையா ஜோசப் ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற ஆராதனை நிகழ்வில், ஆலய பங்குத் தந்தை வணபிதா ஜீவராஜ் மற் றும் கிறிஸ்தவ மக்கள் கலந்து கொண்டனர்.

ஆலயத்தைச் சுற்றியுள்ள சூழலில் ஆயுதம் தாங்கிய பொலிஸாரும், இராணுவத்தினரும் கடமையில் ஈடுபட்டிருந் தனர்.





# சுனாமி நினைவு தின சிரமதான நிகழ்வு பெரியநீலாவணையில்



**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

மருதமுனை பிரண்ஷிப் போரம், மற்றும் ஷம்ஸ் டொப் 97 ஆகிய சமூக அமைப்புகள் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், பெரியநீலாவணை பொலிஸ் நிலையம் ஆகியவற்றுடன் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த 19 ஆவது தேசிய பாதுகாப்பு தினமான சுனாமி ஞாபகார்த்த சிரமதான நிகழ்வு பெரியநீலாவணை சுகாதார சிகிச்சை மத்திய நிலையத்தில் ஏ.எஸ். எம்.முஜீப் தலைமையில் இன்று நடைபெற்றது.

டெங்கு அபாயத்தில் இருந்து நம்மை நாம் பாதுகாப்போம் எனும் தொனிப் பொருளில் முன்னெடுக்கப்பட்ட இந்த நிகழ்வில் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி, பெரியநீலாவணை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜே.எஸ். கே.வீரசிங்க, மருதமுனை ஜம்இய்யதுல் உலமா சபை தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான அஸ்ஷெய்க் எப்.எம்.அஹமது அன்சார் மௌலானா உட்பட சமூக ஆர்வலர்கள், சமூக அமைப் புக்களின் உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கல்முனை சாஹிறா கல்லூரியின் அபிவிருத்தி குழுச் செயலாளர் சாய்ந்த மருது வைத்தியசாலையில் வைத்தியர் டாக்டர் சனூஸ் காரியப்பர் தலைமையிலான "சாஹிறியன்ஸ் 90" அமைப்பினரும் இதில் கலந்து கொண்டனர்.

# பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்ச்சங்க நிர்வாகம் தெரிவு




பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்சங்கத்தின் 98ஆவது செயற் குழு நிர்வாகிகள் அண்மையில் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி தலைவராக கஜனி சிவராஜாவும், செயலாளராக சுகுமாரன் துவாரகனும், பொருளாளராக பறுனாந்து டக்ஷனும், உப தலைவராக சந்திரசேகரம் பிள்ளை சவின் ஆர்த்தியும், உப செயலாளராக கதிர்காமத்தம்பி விருட்சிகாவும் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர்.

அத்துடன், நிர்வாகக்குழு உறுப் பினர்கள் மற்றும் பீடப்பிரதி நிதிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.








# மன்னாரில் தீப்பந்தம் ஏற்றி அஞ்சலி!

(மன்னார் நிருபர்)

சுனாமி பேரலையில் உயிரிழந்தவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று (26) செவ்வாய்க்கிழமை மன்னார் பிரதான பாலத்தடியில் முன்னாள் மன்னார் பிரதேச சபை உறுப்பினர் லுஸ்ரின் மோகன்ராஜ் தலைமையில் இடம்பெற்றது.

உயிரிழந்தவர்களை நினைவு கூறும் வகையில் இன்று காலை 9.25 இந்தக் கடற்கரை பகுதியில் தீப்பந்தம் ஏற்றி மலர் தூவி உயிர் நீத்தவர்களுக்காக உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது.

மெசிடோ நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிறாடோ சமூக செயற்பாட்டாளர் பெனடிற், மன்னார் நகரசபையின் முன்னாள் உப தலைவர் ஜான்சன், மன்னார் நகரசபை முன்னாள் உறுப்பினர் இரட்ணசிங்கம் குமரேஸ் ஆகியோர் நினைவு சுடரை ஏற்றி நினைவஞ்சலியை ஆரம்பித்து வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து கலந்து கொண்ட மீனவர்கள், வர்த்தகர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள், மெசிடோ நிறுவன ஊழியர்கள் இணைந்து சுடர் ஏற்றி, மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.










# கல்முனை கரையோரத்தில் பிரார்த்தனை!

(அஸ்ஹர் இப்றாஹிம், வி.ரி. சகாதேவராஜா, (ஏ.எல்.எம்.ஷினாஸ்)

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 19 வருடங்கள் பூர்த்தியான நிலையில் உயிர்நீத்த தமது உறவுகளுக்காக கல்முனை கரையோர பிரதேசத்தின் பல இடங்களிலும் பிரார்த்தனைகள் இடம்பெற்றன.

பள்ளிவாசல்களில் விஷேட துவாப் பிரார்த்தனைகளும், கோயில், கிறிஸ்தவ தேவால யங்கள் என்பவற்றில் விசேட பூசைகள், ஆராதனைகளும் இடம்பெற்றன. ஞாபகார்த்த மரநடுகை, மையவாடி மற்றும் மயானங்களை துப்புரவு என்பவற்றில் இளைஞர் அமைப்புகள் ஈடுபட்டன .

கடற்கரையோர பிரேதேசங் களில் அமைக்கப்பட்டிருந்த நினைவு தூபிகளுக்கருகில் பெரும் திரளான மக்கள் கூடி தீபமேற்றி உயிர்நீத்த தமது உறவுகளுக்கு அஞ்சல் செலுத்தினர்.





# நபர் ஒருவரைக் கடத்தி கொள்ளையிட்டோர் கைது!

(ரஸீன் ரஸ்மின்)

புத்தளம், வனாத்தவில்லு, எழுவன் குளம் பகுதியில் நபர் ஒருவரை கடத்திச் சென்று தாக்குதல் நடத்தி பணம் மற்றும் கையடக்கத் தொலைபேசியை கொள்ளையடித்த கும்பலொன்றின் சந்தேக நபர்கள் மூவரை கைது செய்துள்ளனர் என்று வனாத்தவில்லுவ பொலிஸார் தெரிவித்தனர்.

வான் ஒன்றில் பயணித்த குழுவினர் பொலிஸார் என்று தம்மைக் கூறிக் கொண்டு அந்த நபரை வலுக்கட்டாயமாகக் கடத்திச் சென்றுள்ளன.

இந்த நிலையில் அவரிடம் ,ருந்து பணம், கையடக்கத் தொலைபேசி என்பவற்றைக்கொள்ளையிட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் எலுவன்குளம், ரால்மடுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மேலும் மூவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படும் வானும் இதுவரை கைப்பற்றப்படவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பில் வன்னாத்தவில்லு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.